# TAMIL LANGUAGE
# PRIMARY SIX
## (2025)

**நோக்கு** : ஆர்வமுட்டும் முறையில் தமிழ்மொழியைக் கற்பித்தல்

**செயல்** : மாணவர்களுக்குப் பலதரப்பட்ட கற்பித்தல் முறைமைகளைக் கொண்டு தமிழ்மொழியை ஆர்வத்துடன் கற்கத் தூண்டுதல்

அன்பார்ந்த பெற்றோர்களே

தொடக்கநிலை இறுதியாண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் மாணவர்களின் கற்றலைப்பற்றி ஆசிரியர்களாகிய நாங்கள் உங்களிடம் பகிர்ந்து கொள்ளப்போகிறோம். வகுப்பறையில் தமிழில் கலந்துரையாடும் சூழலை உருவாக்கித் தந்து அதன்வழி இருவழித்தொடர்புத் திறன்களையும் மாணவர்களின் தமிழார்வத்தையும் வளர்க்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். பாடத்திட்டம், கற்பித்தல் முறைகள், மதிப்பீடு ஆகிய மூன்று அடிப்படைக் கூறுகளைக் கொண்டமைந்த பாடத்திட்டத்தைப் பின்பற்றியே பாடம் கற்பிக்கப்படுகின்றது.

**அறுவகைத் திறன்கள்**

சிங்கப்பூர் பள்ளிகளில் தொடக்கநிலை மாணவர்களிடம் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம், எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம் என்னும் ஆறு திறன்களின் அடிப்படையில் பல்வேறு உத்தி முறைகள் கையாளப்பட்டு வருகின்றன.

**தமிழைக் கற்பிப்பதன் நோக்கம்**

தமிழை மாணவர்களுக்கு மூன்று முக்கிய நோக்கங்களுக்காக்க் கற்பிக்கின்றோம்.

- அடிப்படை மொழித்திறன்களில் முறையான பயிற்சி அளித்தல்;
- நம் பண்பாட்டு கூறுகளையும் பாரம்பரியக் கூறுகளையும் அறியச்செய்தல்;
- நாட்டுருவாக்கத்திற்குத் தேவையான பண்பு நலன்களைப் பெற்றிடச்செய்தல்; ஆகியவற்றின் அடிப்படையில் பாடம் கற்பிக்கப்படுகின்றன.

தமிழ் பயிலும் மாணவர்கள் தத்தம் திறனுக்கேற்பத் தமிழ்மொழியில் தமது திறனை வளர்த்துக் கொள்ளத் தமிழ் கற்றல்-கற்பித்தல் கொள்கை வழி வகுத்துள்ளது.

பள்ளிகளில் தொடக்க நிலை முதலாம் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரை தமிழ் மொழி ஒரே நிலையில் கற்பிக்கப்படுகிறது. இவ்வகுப்புகளில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொடரும் வகுப்புகளில் தமிழ் பயில்வதற்குத் தேவையான அடித்தளத்தை இப்பயிற்சி அளிக்கிறது.

தொடக்க நிலை ஐந்தாம், ஆறாம் வகுப்புகளில் தமிழ், உயர்தமிழ், அடிப்படைத் தமிழ் என மூன்று நிலைகளில் தமிழ்மொழி கற்பிக்கப்படுகிறது.

**தேர்வின் நோக்கம்**

கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல், சிந்தித்தல் ஆகிய அடிப்படைத் திறன்களை, மாணவர்கள் எந்த அளவிற்கு அடைந்திருக்கிறார்கள் என்பதை அறிந்து மதிப்பீடு செய்வதே தேர்வின் நோக்கமாகும்.

**தேர்வின் தன்மை**

1) முன்னோட்டத்தேர்வு (Preliminary Examination) - 200 மதிப்பெண்கள்
2) இறுதியாண்டுத்தேர்வு (PSLE) - 200 மதிப்பெண்கள்

**தாள் 1**

தொடக்கநிலை ஆறாம் வகுப்புத் தேர்வுத்தாளில் இரண்டு கட்டுரைத் தலைப்புகள் இடம்பெறும். அவற்றுள் ஒன்று, படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு அமையும். படத்தொடர் 6 கட்டங்கள் கொண்டது. முதல் 5 கட்டங்களில் படங்களும் ஆறாவது கட்டத்தில் கேள்விக்குறியும் இடம்பெற்றிருக்கும். மாணவர் கட்டுரை எழுதுவதற்கு 8 துணைச்சொற்கள் கொடுக்கப்பட்டிருக்கும். மற்றொன்று கட்டுப்படுத்தப்பட்ட தலைப்பு. இத்தலைப்பு, குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு அமையும். இவ்விரண்டு தலைப்புகளுள் மாணவர் ஏதேனும் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து, 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுத வேண்டும். இதற்குக் கொடுக்கப்படும் கால அளவு 50 நிமிடங்கள். மாணவர்கள் கீழ்க்கண்ட உத்தி முறைகளில் ஒன்றைத் தெரிவு செய்து எழுதவும்.

**கட்டுரை உத்திகள்**

ஒரு கட்டுரையை எழுதுவதற்கு பல உத்திகளைப் பயன்படுத்தலாம். ஆனால் கட்டுரையின் தொடக்கம் படிப்பதற்கு ஆர்வமாக இல்லையென்றால், கட்டுரையை மேலும் தொடர்ந்து படிக்க ஒருவருக்கு உற்சாகம் குறைவாகத்தான் இருக்கும். மற்ற

கட்டுரைகளைவிட உங்கள் கட்டுரை படிப்பதற்கு வித்தியாசமாக இருக்கவேண்டுமென்றால், நீங்கள் கட்டுரையை எவ்வளவு சிறப்பாகத் தொடங்கி எழுதுகிறீர்கள் என்பதைப் பொருத்துள்ளது.
கட்டுரையின் தொடக்கப் பத்தியைப் பல உத்திகளைக் கொண்டு எழுதலாம். கீழ்க்காணும் சில உத்திகளை நீங்கள் கருத்தில் வைத்துக்கொள்ளக்கூடியவை:

- பின்னோக்கு உத்தி **(Flashback)**
- உரையாடல் **(Dialogue)**
- கடைசி படத்தைக் கொண்டு தொடக்கத்தை எழுதுதல்
- இனிய சொற்றொடர்களைக் கொண்டு எழுதுதல்

**பின்னோக்கு உத்தி** (Flashback)

பின்னால் நிகழ விருப்பதை, முன் உணர்த்துவதும், முன் நிகழ்ந்தவற்றைப் பின் உணர்த்துவதுமாகியதே பின்னோக்கு உத்தி. கட்டுரையின் முடிவைக் கொண்டும் அந்நிகழ்வுகளைப் பற்றி நினைத்துப் பார்ப்பதும் பின்னோக்கு உத்தி ஆகும்.

எ.கா.: அன்று மட்டும் மாறன் தன் தாயார் கூறியதைக் கேட்டிருந்தால், அவன் அந்த விபத்தில் காயம் அடைந்திருக்கமாட்டான்.

**உரையாடல்** (Dialogue)

இருவருக்கிடையே நிகழும் உரையாடலைக்கொண்டு கட்டுரையைத் தொடங்குவதே உரையாடல் உத்தி ஆகும். உரையாடல் உத்தியைப் பயன்படுத்தும் போது, நிறுத்தல் குறிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதுமட்டுமின்றி, பொருத்தமான நிறுத்தல் குறிகளையும் எழுதிட வேண்டும். மேலும், திறந்த மற்றும் மூடிய மேற்கோள் குறிகளையும் மறவாமல் எழுதிட வேண்டும். இருவரும் உரையாடிக்கொண்டிருக்கும்போது, யார் யாரிடம் பேசுகிறார்கள் என்பதையும் அவர்கள் பேசியதற்குப் பதில் கூறியது யார் என்பதையும் தெளிவாக எழுத வேண்டும்.

எ.கா.: “அம்மா! நான் என் காலை கடன்களை எல்லாம் செய்துவிட்டேன். நீங்கள் தயார் என்றால் கடைக்குப் போகலாமா?” என்று மாறன் தன் தாயாரிடம் கேட்டான். அதற்கு அவன் தாயார், “இன்னும் பத்து நிமிடங்களில் கிளம்பலாமே, நான் அதற்குள் சமைத்துவிடுவேன்,” என்று பதிலளித்தார்.

**<u>கடைசி படத்தைக்கொண்டு தொடக்கத்தை எழுதுதல்</u>**

இந்த உத்தியும் பின்னோக்கு உத்தியைப் போல் தான் செயல்படும். ஆனால், பெரும்பாலும் கடைசி படமான ஆறாவது படம், ஐந்தாவது படத்தை ஒட்டியோ அல்லது தொடர்புக்கொண்டோ அமையும்.

பின்னோக்கு உத்தியில், முடிவை ஒட்டித்தான் எழுத வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை; முடிவை ஒட்டி, சில வருடங்களுக்குப் பின் நிகழ்ந்ததை எண்ணிக்கூட, உங்களுடைய கதாப்பாத்திரம் சிந்திக்கும்படி நீங்கள் எழுதலாம். ஆனால், கடைசி படத்தைக்கொண்டு தொடக்கத்தை எழுதும் போது, சில கட்டுப்பாடுகள் உண்டு.

**<u>இனிய சொற்றொடர்களைக் கொண்டு எழுதுதல்</u>**

நீங்கள் கட்டுரையைப் பெரும்பாலும் இனிய சொற்றொடர்களைப் பயன்படுத்தி எழுதியிருப்பீர்கள். உங்கள் கட்டுரையைப் படிப்பதற்கு மேலும் சிறப்பு சேர்ப்பது, இனிய சொற்றொடர்களே. ஆகையால், மிகப் பொருத்தமான தொடர்களைத் தேர்ந்தெடுப்பது அவசியம்.

குறிப்பு: எச்சூழலையும் விவரித்துக்காட்டும் இனிய சொற்றொடர்களை ஒன்றுக்குப் பதிலாக, சிலவற்றை மனனம் செய்து வைத்திருப்பது, நல்லது.

**குறிப்பு:-** மாணவர்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு உத்தி முறையைக் கொண்டு தங்களது தொடக்கத்தை ஆரம்பிக்கலாம். மாணவர்கள் தங்கள் திறனறிந்து தொடக்கத்தை ஆரம்பிக்க உத்தி முறையைத் தெரிவு செய்வது சிறப்பாகும்.

**வினா 1**

## உங்களின் மறக்க முடியாத பிறந்தநாள்

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாக நீ பயன்படுத்திக்கொள்ளலாம்..

- **என்ன** கொண்டாட்டம்?
- அது **எங்கே** நடந்தது?
- அங்கே **என்ன** நடந்தது?
- அப்போது உங்கள் மனநிலை **எப்படி** இருந்தது?

மாணவர்கள் கட்டுரை எழுதுவதற்குக் கேள்வி ஒன்றைத் தேர்வு செய்வார்களேயானால் கவனத்தில் கொள்ள வேண்டியது:-

- கட்டுரையின் தலைப்பு
- கட்டுரை தன்மையிலா (நான்) படர்க்கையிலா (அவன்) என்பதைத் தெளிவுப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- மாற்றி எழுதும் பட்சத்தில் மதிப்பெண் வழங்கப்படாது.
- கட்டுரை எழுதுவதற்குக் கொடுக்கப்பட்டுள்ள கேள்விச் சொற்களைக் கொண்டு பத்தி அமைப்பு அமைதல் வேண்டும்.
- கட்டுரை படிப்பவரை மேலும் மேலும் படிக்கத் தூண்டுவதாக அமைதல் வேண்டும்.
- கட்டுரை தெளிவாகக் கூற வரும் கருத்தை வெளிப்படுத்துவதாக அமைந்தால்தான் கட்டுரை சிறப்பாக இருக்கும்.
- கட்டுரையில் ஒவ்வொரு பத்திக்கும் இடையில் கதையின் தொடர்ச்சி அமைதல் அவசியம்.
- கட்டுரையில் திருப்புமுனை அமைவது மிக மிக முக்கியம்.

**இனிய சொற்றொடர்**

**முன்னுரை**

**காலையில் சூரியன் எழுந்து தன் பொன்னொளிக் கதிர்களை எங்கும் பரப்பினான்.1 காலையின் மெல்லிய வெயில் செடி கொடிகளில் உள்ள பனியை உருக்கியது.2** மக்கள் ஓட்டமும் நடையுமாக வேலைக்கு சென்றனர். முதியவர்கள் காலை உடற்பயிற்சியை மேற்கொண்டனர். நான் நித்ரா தேவின் அரவணைப்பில் இருந்து மெல்ல எழுந்துக் கொண்டிருந்தேன் . அன்று என்னுடைய பிறந்தநாள். எனக்கு **உல்லாச வானில் சிறகடித்து பறப்பதைப் போல** இருந்தது. நான் அசுரர் வேகத்தில் என்னுடைய காலை கடன்களை முடித்து விட்டு என் அறைக்கு வெளியே சென்றேன்.

**அழகிய சொல்லாட்சி**
**காலையின் மெல்லிய வெயில் செடி கொடிகளில் உள்ள பனியை உருக்கியது**

**3அப்போது என் அம்மா என்னிடம் , "பாரதி ! இன்று நம் உறவினர்கள் ஒரு முக்கியமான விஷயத்திற்காக இந்தியா செல்ல வேண்டும்.** அதனால் , அவர்களால் உன்னுடைய **பிறந்தநாள் விழாவுக்கு4** வர முடியாது. உன்னுடைய இரு நண்பர்கள் லதாவும் மாலாவும் ஒரு ஒப்படைப்புக்காகப் பள்ளிக்குச் சென்றிருப்பதால் அவர்களாலும் வர முடியாது. **அதனால் நாம் வீட்டில் தான் நம் குடும்பத்தோடு பிறந்தநாள் விழாவைக் கொண்டாட முடியும்," என்று என் தாயார் என்னிடம் கூறினார்.5** அதை கேட்ட எனக்கு அடிவயிற்றில் இடி விழுந்ததைப் போல இருந்தது. **என் கண்களில் கண்ணீர் குளமாகத் தேங்கியது.6** என்னுடைய சோகத்தைக் கண்ட என் தயார் என்னைக் கட்டி அணைத்துக் கொண்டார். போன பிறந்தநாளைப் போல இந்தப் பிறந்தநாளைக் கொண்டாட முடியாது என்று நினைத்த போது எனக்குச் சிறிது வருத்தமாக இருந்தது. இருந்தாலும், என்னுடைய பிறந்தநாள் கேக்கையும் பிறந்தநாள் பரிசுகளையும் நினைத்து சூரியனைக் கண்ட தாமரையைப் போல என் முகம் மலர்ந்தது.

**கேள்வி 1**
**என்ன கொண்டாட்டம்?**

**கேள்வி 2**
**எங்கே நடந்தது?**

**அழகிய வர்ணனை**
**கண்ணீர் குளமாகத் தேங்கியது.**

**கேள்வி 3**

**என்ன நடந்தது?**

**கேள்வி 4**

**மனநிலை**

**என்னுடைய மதிய உணவிற்கு பிறகு நான் சிறிது நேரம் விளையாடினேன்.7** என் தாயாருக்கு எனக்கு பிடித்த சிற்றுண்டிகளை தயாரிக்க சிறிது உதவினேன். அதற்குப் பிறகு நான் என் அழகான புதிய ஆடையை அணிந்தேன். என் உற்றார் உறவினர் வரவில்லை என்பதை மறந்துவிட்டு நான் புன்னகை தவழும் முகத்துடன் களிப்பாக இருந்தேன். மாலை ஆறு மணி ஆகிவிட்டது. அப்பா குளிர்பதனப்பெட்டியில் இருந்து பிறந்தநாள் கேக்கை எடுத்து வந்தார். என்னுள் மகிழ்ச்சி தரைபுரண்டோடியது. முதலில் என் பெற்றோர் எனக்கு ஒரு மிதிவண்டியைப் பரிசாகத் தந்தனர். **எனக்கு எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது. நான் கேக் பெட்டியைத் திறந்து பார்த்த போது என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை.8**

**"எப்படி என் பெற்றோர் எனக்கு சாக்லேட் கேக் பிடிக்காது என்பதை மறந்திருப்பார்கள்," என்று நான் நினைத்தேன்.9** நான் என் அம்மாவிடம் அதை பற்றி கூறினேன். என் அம்மா என்னிடம் மன்னிப்புக் கேட்டு அவர் செய்த சிற்றுண்டிகளை என்னிடம் உண்ண தந்தார். என் அம்மா அடுத்த முறை வேறு கேக் வாங்கி தருவதாகக் கூறினார். என்னுடைய உற்றார் உறவினர்கள் வராமல் இருந்ததும் எனக்குப் பிடிக்காத கேக் வாங்கினாலும் என்னுடைய பிறந்தநாள் கொண்டாட்டத்தை நினைத்து **சந்தோசமாக10** இருந்தது.

**நன்றி - மனோபாரதி** 5B1

1.இனிய சொற்றொடர் 2. அழகிய சொல்லாட்சி 3. கட்டுரையின் தொடர்ச்சி 4. கேள்வி 1 5. கேள்வி 2 6. அழகிய வர்ணனை 7. கட்டுரையின் தொடர்ச்சி 8. கேள்வி 3 9. கட்டுரையின் தொடர்ச்சி 10. கேள்வி 4

**வினா 2 - படக்கட்டுரைக்கான ஓர் எடுத்துக்காட்டு.**

| | |
|---|---|
| **முன்னுரை – ஒலிக்கொண்டு ஆரம்பித்தல்** | **“ரிங்! ரிங்!" என்று பள்ளி இடைவேளை மணி ஒலித்தது.**1 **மாணவர்கள் தங்களது கதைப்புத்தகங்களையும் பணப்பைகளையும் எடுத்துக்கொண்டு வகுப்பறைக்கு வெளியே இரண்டு வரிசைகளை நின்றனர். எனது வகுப்பு ஆசிரியர், திருமதி லின், தனது வகுப்பு மாணவர்களைப் பள்ளி உணவகத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே மாணவர்களும் சில ஆசிரியர்களும் ஈக்கள் போல் மொய்த்துக்கொண்டிருந்தனர். நானும் என் கதைப்புத்தகத்தை எடுத்துக்கொண்டு என் வகுப்பு மாணவர்களுடன் எனது வகுப்பின் நீளமான மேசையில் எனது கதைப் புத்தகத்தை வைத்தேன்.**2 |
| **கதைக்குள் வருவதற்கு முன்பு முன்னுரை** | பலர் தங்களுடைய பணப்பையுடன் உணவகத்திலிருந்த கடைகளுக்குச் சென்றனர். ஆனால், சிலர் வீட்டு உணவை கொண்டு வந்திருந்தினர். |
| **படம் 1** | நானும் என் வீட்டிலிருந்து சில ஆப்பில் பழத் துண்டுகளைக் கொண்டு வந்திருந்தேன். அப்போதுதான், நான் என் உணவு பெட்டியைக் கொண்டு வரவில்லை என்று அறிந்தேன்.3. |
| **ஆர்வமூட்டும் தொடர்ச்சி** | நான் **ஓட்டமும் நடையுமாக** என் வகுப்பறைக்குச் சென்றேன். நான் மெதுவாக கதவைத் திறந்தேன். அங்கே எனக்காக ஓர் அதிர்ச்சியான காட்சி காத்துக்கொண்டிருந்தது. |
| **படம் 2** | வகுப்பறையில் எனது தோழனான ரவி, சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மாலதியின் பையிலிருந்து அவளது பணப்பையை எடுத்தான். நான் அங்கே இருப்பதைப் பார்த்தவுடன் அவன் மாலதியின் பணப்பையைத் தனது சட்டைப் பையில் போட்டுவிட்டான். நான் எதுவும் நடக்காதது போல் நடித்து என் உணவு பெட்டியை எடுத்துக்கொண்டு வெளியே சென்றேன். ஆனால், நான் பள்ளி உணவகத்திற்குச் செல்லவில்லை. ரவி வெளியே வந்தவுடன், நான் அவனைப் பின்தொடர்ந்தேன்.4 |

படம் 3

ஆர்வத்தைத் தக்க வைத்தல்

ரவி ஒரு குப்பைத்தொட்டியின் பக்கத்தில் சென்றான். அவன் பணப்பையிலிருந்த பணத்தை எடுத்துக்கொண்டு, பணப்பையை குப்பைத்தொட்டியில் எறிந்தான். என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை. என் தோழன் ரவியா இச்செயலைச் செய்கிறான் என்று நான் என்னிடமே கேட்டுக் கொண்டேன். பிறகு, நான் திரும்பவும் பள்ளி உணவகத்திற்குச் சென்றேன். அங்கே **எனக்குப் பிடித்த பழங்களைக் கூட நான் ருசித்து சாப்பிடவில்லை.5**

பள்ளி இடைவேளைக்குப் பின், மாணவர்கள் தங்களது வகுப்பறைக்குச் சென்றனர். ரவி செய்ததை எண்ணி என் முகம் வாடியிருந்தது. அப்போது, மாலதி பதற்றத்துடன் திருமதி லின்னிடம், தனது முப்பது வெள்ளி இருந்த பணப்பையைக் கண்டுப்பிடிக்க முடியவில்லை என்று கூறினாள். **திருமதி லின் எல்லாரிடமும் இந்தச் செய்தியை அறிவித்தார். நான் ரவியைப் பார்த்து முறைத்தேன். எல்லோரும் வகுப்பறையின் மூலைகளில் தேட ஆரம்பித்தனர். ஆனால், யாருக்கும் ரவிதான் அதை எடுத்தான் என்பது தெரியவில்லை.** சிறிது நேரத்திற்கு பின் எல்லோருக்கும் சோர்வாக இருந்ததால், தேடலை விட்டுவிட்டார்கள்.

படம் 4

கதையைக் கண் முன் கொண்டு வருவது

பள்ளி முடிந்தவிட்டது என்பதைக் குறிக்கும் மணியின் ஒலியைக் கேட்டவுடன், **மாணவர்கள் வகுப்பறையைவிட்டுச் சிட்டாய் பறந்தனர்**. திருமதி லின் வகுப்பறையில் மாலதியிடம் பணப்பையை விசாரித்திக்கொண்டிருந்தார். நானும் ரவியும் வகுப்பறையின் வெளியே சென்றோம். " **நீதான் பணப்பையை எடுத்தாய்!** " என்று நான் ரவியிடம் கோபத்துடன் கத்தினேன். பயத்தில் வியர்வை துளிகள் அவன் முகத்தில் உருவாயின.

இனிய சொற்றொடர்

படம் 5

| | |
|---|---|
| **முடிவுரை** | அவன் திருமதி லின்னிடம் தலைக் குனிந்தபடியே சென்று நடந்தவற்றை கூறினான். ரவி மாலதியிடம் மன்னிப்பு கேட்டு அவளிடம் அவன் எடுத்த முப்பது வெள்ளியைக் கொடுத்தான். ஆனால், அவளுடைய பணப்பையை குப்பைத்தொட்டில் போட்டதாக குற்ற உணர்வுடன் கூறினான். " **மற்றவர்களின் பொருளுக்கு அல்லது பணத்துக்கு ஆசைப்படுவது தவறான** |
| **விழுமியத்தோடு முடித்தல்** | **செயல். இருப்பதை வைத்துக்கொண்டு மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும், "என்று திருமதி லின் அறிவுரை கூறினார்.** திருமதி லின்னின் அறிவுரையை நினைவில் வைத்துக்கொண்டு, ஒரு |
| **திருந்துதல்** | **நல்ல பாடத்தைக் கற்றுக்கொண்டான்**, ரவி. |
| | நன்றி க.பூமதி 5B1 |

- முதல் படத்துக்கு முன்னால் ஒரு கட்டமும் இறுதி கேள்விக்குறிக்குப் பின்னால் ஒரு கட்டமும் வரைந்துகொண்டு கட்டுரை பயிற்சியில் ஈடுபடுவது நல்லது.
- கட்டுரையில் கதாபாத்திரம் கதை முழுவதும் பேசப்பட வேண்டும்.
- படங்களைக் கீழ்க்கண்டவாறு பிரித்துக்கொண்டால் கதையைக் கோர்வையாக எழுத முடியும்.

  0-1 – முன்னுரை

  2-3 - கதை வளர்ச்சி

  4-5 - கதையின் உச்சக்கட்டம்

  6 - திருப்புமுனை

  7 - முடிவு

**SHUQUN PRIMARY SCHOOL**
**Tamil Language**
**Composition Checklist**
**Primary 6**

பெயர்**: ________________ (          )** வகுப்பு**: _____** மதிப்பெண் **: ______/40**

குறிப்பு **:** ஏற்புடைய இடத்தில் புட்குறியிடவும்☑

| கருத்து | |
|---|---|
| முழுமையான கருத்துகள் அமைந்திருத்தல்.<br>கருத்துகள் போதுமான அளவு விரிவுப்படுத்தப்பட்டு முழுமையான கருத்துகள் அமைந்திருத்தல்.<br>கற்பனைவளம் தனித்துவத்துடன் படைப்பு முழுதும் வெளிப்படுதல் | |
| கருத்துகள் போதுமானதாகவும் விளக்கமாகவும் அமைந்திருத்தல்<br>கற்பனை வளம் ஓரளவு இடம்பெற்றல் | |
| போதுமான கருத்துகள் அமைந்திருத்தல்<br>கருத்துகள் ஓரளவே விளக்கியிருத்தல்<br>கற்பனைவளம் குறைவு | |
| ஒரு சில கருத்துகள் இடம் பெற்றல்<br>கருத்துகள் போதிய அளவு விரிவுப்படுத்தப்படாமல் இருத்தல்<br>கற்பனைவளம் மிகக் குறைவு | |
| பெரும்பாலும் கருத்துகள் பொருத்தமற்றவையாகவும், கருத்துகள் தெளிவற்று குழப்பமாகவும் அமைந்திருத்தல்<br>கற்பனைவளம் குறைவு | |
| மொழி | |
| பொரும்பாலும் மொழி, எழுத்து, நிறுத்தற்குறி பிழைகள் இல்லாமை<br>சரியான சொல்லாட்சி<br>கருத்துகள் நிரல்பட , பத்தி பிரித்தும் தொடர்புபடவும் சிறப்பாக அமைத்திருத்தல் | |
| மிகக் குறைவான மொழி, எழுத்து, நிறுத்தற்குறி பிழைகள் கொண்டிருத்தல்<br>போதுமான சொல்லாட்சி<br>கருத்துகளை நிரல்பட பத்தி பிரித்தும் தொடர்புபடவும் நன்றாக அமைந்திருத்தல் | |
| ஓரளவு மொழி, எழுத்து, நிறுத்தற்குறி பிழைகள் கொண்டிருத்தல்<br>போதுமான சொல்லாட்சி<br>கருத்துகளை நிரல்பட பத்தி பிரித்தும் தொடர்புபடவும் அமைத்தல் | |
| அதிகமான மொழி, எழுத்து, நிறுத்தற்குறி பிழைகள் கொண்டிருத்தல்<br>குறைவான சொல்லாட்சி<br>பொருத்தமற்ற முறையில் கருத்துகளைப் பத்தி பிரித்தும் தொடர்புபடவும் அமைத்திருத்தல் | |
| பெரும்பாலும் மொழி, எழுத்து, நிறுத்தற்குறி பிழைகள் கொண்டிருத்தல்<br>மிகக் குறைவான சொல்லாட்சி<br>மிகப் பொருத்தமற்ற முறையில் கருத்துகளைப் பத்தி பிரித்தும் தொடர்புபடவும் அமையாயிருத்தல் | |

ஆசிரியர் கையொப்பம் ________________ பெற்றோர் கையொப்பம் ________________

கட்டுரை திருத்துவதற்கான வழிகாட்டி
தாள் 1

| எண் | பொருள் | குறி | |
|---|---|---|---|
| 1 | அழகிய சொல் /வாக்கியம் | ✓ | Descriptive words / Sentences |
| 2 | தவறான எழுத்து / சொல் | ___ | Wrong Spelling ( letter / words ) |
| 3 | இலக்கணப்பிழை | X | Grammar |
| 4 | வாக்கியப் பிழை | ( ) | Sentence Construction |
| 5 | சொல் /வாக்கியம் விடுதல் | ⮝ | Omission of a word / sentence |
| 6 | நிறுத்தற்குறி பிழை | o | Punctuation |

- ஒரு பிழை முதல் தடவை குறிக்கப்பட்ட பின் அப்பிழை பல முறை இடம் பெற்றாலும், அப்பிழை கருத்தில் கொள்ளப்படாது.
- பெயர்களில் தவறு இருந்தால் பிழையாகக் கருத்தில் கொள்ளப்படாது. எடு. காட்டு - மாரன்

**<u>எழுத்து / சொற்பிழை</u>**

- மனித்தார் - மன்னித்தார்

**<u>ஒலி வேறுபாடு</u>**

- மனம் வீசியது
- சூரிய ஒலி

**<u>குறில் நெடில்</u>**

- கொடு - ‘கோடு’
- முட்டை – மூட்டை

**<u>எழுவாய் – பயனிலை இயைபு</u>**

- திரு ராமு கடைக்குச் **<u>சென்றான்</u>**.
- அண்ணனும் தம்பியும் பேரங்கடிக்குச் **<u>சென்றார்.</u>**

குறிப்பு
இனவெழுத்து (ட,ண த,ந ற,ன ) இலக்கணப் பிழை (அவனுக்கு - அவனிடம்)
சொற்பிழை (மன்ணித்தார், பொனார்) வாக்கியப்பிழை (அவன் –சென்றாள் )
இப்பிழைகளைக் களைய மாணவர்கள் பயிற்சி செய்தல் அவசியம்.

**தாள் 2 (மொழி)**

இவ்வினாத்தாளில் கருத்தறிதல், குறிப்பு எழுதுதல், மொழி மரபு மற்றும் பயன்பாடு, செய்யுள், பழமொழி ஆகியவற்றையொட்டி வினாக்கள் அமையும். மாணவர் அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்க வேண்டும்.

**1.வேற்றுமை**

1. எழிலன் எழுதிய ________________ முதல் பரிசு கிடைத்தது.

(1) கட்டுரைக்கு
(2) கட்டுரையை
(3) கட்டுரையில்
(4) கட்டுரையையுடைய

**2. அடைமொழி / எச்சம்**

1. சித்ரா ______________ பாடும் திறன் உடையவன்.

(1) இனிய
(2) இனிப்பாக
(3) இனிமையாக
(4) இனிமையான

**3. முன்னுணர்வுக் கருத்தறிதல்**

ஓர் அரசனின் அரண்மனையில் பெரிய கதவு ஒன்று இருந்தது. ஒரு நாள் அரசனுக்கு விநோதமான **Q**1_____தோன்றியது. அவன் தன் அரண்மனையில் இருந்த அமைச்சர்களை அழைத்தான்.

(1) விருப்பம்

(2) எண்ணம்

(3) நோக்கம்

(4) ஆவல்

**2. கருத்துவிளக்கப்படக் கருத்தறிதல் (Booklet B)**

இப்பகுதியில் மூன்று தெரிவுவிடைக் கேள்விகளும் ஒரு சுயவிடைக் கேள்வியும் கேட்கப்படும். சுயவிடைக் கேள்வி பகுதியில் சுயவிடைக் கேள்வியாகவோ அல்லது குறிப்பு எழுதுவது போலவோ அமையலாம்.

1A. சிறுவர்கள் எந்தெந்த நடவடிக்கைகளில் கலந்து கொள்ளலாம்?

**அல்லது**

1B. நீங்கள் உங்கள் குடும்பத்துடன் குடும்ப தின நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இருக்கிறீர்கள். இந்நிகழ்ச்சியில் உங்கள் நண்பரும் கலந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறீர்கள். உங்கள் நண்பர் இந்த நிகழ்ச்சிக்கு வருவதன் மூலம் என்னென்ன நடவடிக்கைகளில் கலந்துகொள்ளலாம் என்பதையும் நிகழ்ச்சி நடைபெறும் இடத்தையும் குறித்து உங்கள் நண்பருக்கு ஒரு குறிப்பு எழுதுக?

**<u>3. சுயவிடைக் கருத்தறிதல் (Booklet B)</u>**

சுயவிடைக் கருத்தறிதலில் இறுதிக் கேள்வி குறிப்பு வரைவது போலவோ அல்லது சுயவிடைக் கருத்தறிதலாகவோ அமையும்.

1A. குணாளன் மாதவனிடம் உண்மையான நட்பு கொண்டிருக்கிறான் என்பதை விளக்கும் இரண்டு சம்பவங்களைச் சுட்டிக்காட்டி நீ உன் நண்பனுக்கு ஒரு குறிப்பு எழுது.

அல்லது

1B. குணாளனின் உண்மையான நட்பை மாதவன் எவ்வாறு அறிந்துகொண்டான்?

**குறிப்பு:-**

- மாணவர்கள் பனுவல் முழுவதும் படித்தபின் உண்மையான நட்பு வெளிப்படும் இடங்களைக் கண்டறிந்து அக்கேள்விக்கு ஏற்ப பதிலை அமைத்துத்தர வேண்டும்.
- மாணவர்கள் பதிலை அடையாளம் காண முக்கியக் கருத்தாக கருதும் சொற்களை இனங்கண்டு கோடிடவும்.
- மிகப் பொருத்தமான இணைப்புச் சொற்களைக் கொண்டு வாக்கியங்களை இணைத்துப் பதிலை முழுமையாக முடிக்க வேண்டும்.

***ஒரு சில இணைப்புச்சொற்கள்**

மேலும், இருப்பினும், ஆனால், ஆகவே, எனவே, மற்றும், பின்

## தாள் 3 - கேட்டல் கருத்தறிதல்

வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், வார மாத இதழ்கள் போன்றவற்றில் இடம்பெறும் உள்நாட்டுச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், அறிவிப்புகள், கட்டளைகள், விளம்பரங்கள், சிற்றுரைகள், கதைகள், உரையாடல்கள், நேர்முகப் பேட்டிகள், வரைபடங்கள், சிந்தித்து பதிலைத் தெரிவு செய்தல் போன்றவற்றையொட்டிய 10 வினாக்கள் இத்தேர்வில் இடம்பெறும். ஒவ்வொரு வினாவும் 3 தெரிவுகளைக் கொண்டிருக்கும். இத்தேர்வுக்குரிய நேரம் 30 நிமிடங்கள் ஆகும்.

**எடுத்துக்காட்டு**

**நீங்கள் பின்வரும் உரையாடலைக் கவனமாகக் கேட்டு வினா 1-க்கு விடையளிக்கவும்.**

**அண்டைவீட்டுக்காரர் :** வணக்கம் மாலா. நலமா இருக்கியாம்மா?

**மாலா :** வணக்கம் ஐயா. நான் நலமா இருக்குறேன். நீங்க ?

**அண்டைவீட்டுக்காரர் :** நானும் நலமா இருக்குறேன். அண்டை வீட்டுலெ வசிக்கிறோம். ஆனா நாம அடிக்கடி சந்திக்க முடியலையே!

**மாலா :** ஆமாம் ஐயா. நான் காலையிலேயே பள்ளிக்குப் போயிடுறேன். மாலையிலேதான் வீட்டுக்கு வர்றேன். ஆதனாலதான் உங்களை அடிக்கடிப் பாக்க முடியலே.

**அண்டைவீட்டுக்காரர்:** உடல் நலமில்லாம இருக்கிற என் தாயாரைப் பார்த்துட்டு வர இன்னைக்கு நாங்க எல்லாரும் கோலாலம்பூருக்குப் புறப்படுறோம். திரும்பி வர நாலு நாள்கள் ஆகும். அதுவரை, எங்க வீட்டுக்கு வெளியே இருக்குற செடிகளுக்குத் தினமும் கொஞ்சம் தண்ணீர் ஊற்ற முடியுமா?

**மாலா :** ...................................................................

3. மாலாவின் பதில் என்னவாக இருக்கும்?

(1) எனக்கு நேரம் கிடைத்தால் செய்கிறேன்.

(2) நீங்கள் உங்கள் உறவினர்களிடம் உதவி கேட்கலாமே.

(3) இதில் ஒரு சிரமமும் இல்லை. கண்டிப்பாகச் செய்கிறேன்.

**குறிப்பு:-**
மாணவர்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ள எதிருரைப் பனுவலில் அடுத்த உரையாடல் என்ன என்பதை ஊகித்துப் பதிலைத் தேர்வு செய்யவும். மாணவர்களின் கவனம் பனுவலில் இருத்தல் அவசியம்.

## தாள் 4 - வாய்மொழித் தேர்வு

வாய்மொழித் தேர்வில் மூன்று கூறுகள் இடம்பெறும். அவை வாய்விட்டு வாசித்தல், ஒளிக்காட்சியை விவரித்தல், ஒளிக்காட்சியோடு தொடர்புடைய உரையாடல் என்பனவாகும். ஒரு வாசிப்புப் பகுதியை மாணவர் தேர்வாளர் முன்னிலையில் வாசித்துக் காட்டுதல் வேண்டும். அதன் பின்னர், ஒளிக்காட்சியோடு தொடர்புடைய உரையாடல் இடம்பெறும். இப்பகுதியில் மாணவர்கள், கேட்கும் கேள்விகளுக்கு ஏற்ப பள்ளி மற்றும் சமூகத்தைக் இணைத்துப் பேசவேண்டும். தேவை ஏற்பட்டால் தேர்வாளர், மாணவரைப் பேச ஊக்குவிக்கும் வண்ணம் சில தூண்டுதல் வினாக்களைக் கேட்டுப் பதிலை வரவழைப்பார்.

**எடுத்துக்காட்டு**

**வாசிப்புப் பனுவல் 1**

வெகு காலத்திற்குப் பிறகு வெளியூர் அன்பர் ஒருவர் முல்லாவை வந்து சந்தித்தார். இருவரும் சுவையாக நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தனர். பேச்சின் இடையே வெளியூர் அன்பர், “முல்லா அவர்களே! தங்களது வயது என்ன?” என்று கேட்டார். நாற்பது வயது என்று முல்லா பதிலளித்தார். வெளியூர் நண்பர் வியப்படைந்தவராக, “என்ன முல்லா அவர்களே! ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் தங்களைச் சந்தித்த போதும் உங்களுக்கு வயது நாற்பது என்றுதான் கூறினீர்கள்”, என்றார்.

அதற்கு முல்லா, “நான் சொன்ன சொல் மாறாதவன். ஒரு தடவை சொன்ன சொல்லை மாற்றிச் சொல்லும் புத்தி எனக்குக் கிடையாது” என்று சிரித்துக் கொண்டே கூறினார். அன்பரோ எதுவும் புரியாமல் வாயடைத்து நின்றார்.

**எடுத்துக்காட்டுகள்;-**

1. இந்தக் காணொளியில் நீங்கள் பார்த்த ஒரு செயலைப்பற்றிக் கூறு?

| |
|---|
| இந்தக் காணொளியில் ஒரு வீடு இருக்கிறது. அந்த வீட்டுல ஒரு அம்மாவும் மகனும் இருக்கிறார்கள். மகன் வீட்டுக்குள்ள வரும்போது கதவில் சொருகப்பட்டிருக்கிற ஒரு காகிதத்தைப் பார்க்கிறார்கள். அவருக்கு மனசுக்கு கஷ்டமாக இருக்கிறது. அவர் தன்னுடைய மனக் கவலையையும் உதவும் எண்ணத்தையும் அம்மாக்கிட்ட சொல்கிறார். அவருடைய அம்மாவும் அதே எண்ணத்துல இருக்கிறதால ஏற்கனவே சேர்த்து வைத்திருந்த சில பொருள்களோடு தன் மகனையும் பொருள்களைக் கொண்டு வந்து போடச் சொன்னார். அம்மாக்கிட்ட இருக்கும் பழக்கம்தான் மகனுக்குள்ளும் இருந்தது. ஒரு அட்டைப் பொட்டியில் தங்களுக்குத் தேவையில்லாத ஓரளுக்கு நல்ல பொருள்களைப் போட்டு உதவி தேவைப்படுபவர்களுக்குக் கொடுக்கிறார்கள். இந்த உலகத்தில் உதவிகள் என்பது ஏதாவது வகையில தேவைப்படுகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு அருகில் போய் கொடுக்காவிட்டாலும் அனுப்பியாவது மகிழ்ச்சிக் கொள்ளலாம். |

**குறிப்பு :- பேச்சுத் தமிழிலும் எழுத்துத் தமிழிலும் பேசலாம்.**

2. நீங்கள் மற்றவருக்கு உதவி செய்த அனுபவத்தை எங்களுடன் விரிவாகப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

| |
|---|
| நான் பள்ளி முடிந்து பேருந்துக்காகக் காத்திருந்தேன். அப்போது ஒருமுறை வயதான மூதாட்டி பேருந்தில் ஏறுவதற்கு சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். நான் உடனே அவர் கையைப் பிடித்து பேருந்துக்குள் பாதுகாப்பாக ஏற உதவினேன். அதோடு அல்லாமல் அவர் அமர்வதற்கு ஓர் இடத்தையும் பிடித்துக்கொடுத்தேன். அப்போது அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அவருக்கு இதுதான் முதல் முறையாக நடந்தது என்று கூறினார். எனக்கு அவர் நன்றி கூறியபோது நான் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தேன். மற்றவர்களுக்கு உதவும்போது கிடைக்கின்ற இன்பம் வார்த்தையால் சொல்ல முடியாது. மூதாட்டிக்கு உதவிய மகிழ்ச்சியோடு வீட்டிற்குச் சென்றேன். |

**குறிப்பு :- "விளக்குக" என்று வந்தால் மாணவர்கள் சொந்த அனுபவங்கள் கொண்டு விளக்க வேண்டும்.**

3. பள்ளிகளில் மாணவர்களிடம் உதவி செய்யும் எண்ணத்தை ஏற்படுத்த என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்?

- பல இன மக்கள் வாழும் நமது குடியரசில் உதவும் மனப்பான்மை இருந்தால்தான் நாம் ஒற்றுமையாக வாழ முடியும்.
- பள்ளிகள் மாணவர்கள் மற்றவர்களுக்கு உதவும் பண்பை ஆரம்பக் காலத்திலிருந்தே வளர்த்து வருகின்றன. மாணவர்கள் தினந்தோறும் ஒருவருக்கு ஒருவர் உதவிக் கொண்டாலும் மேலும் அதை மாணவர்கள் மனதில் ஆழமாகப் பதிய வைக்க வேண்டும்.
- மாணவர்களை முதியோர் இல்லத்துக்கு அழைத்துச் செல்லலாம்.
- மற்றவர்களுக்கு உதவும் மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குச் சின்ன சின்ன பரிசுகள் வழங்கலாம்.
- அன்னை தெரசா போன்று உதவியால் உயர்ந்த உன்னத மனிதர்களின் வரலாறுகளை வகுப்பில் பகிர்ந்து கொள்ளலாம்.
- இயற்கை பேரிடர்களால் உதவி தேவைப்படும் நாடுகளுக்கு மாணவர்களை உதவிக்கரம் நீட்ட அழைக்கலாம்.

**உத்தி முறை - PEARS**

ஒளிக்காட்சி உரையாடலுக்கு மாணவர்களுக்கு **"PEARS"** என்ற உத்தி முறை கற்பிக்கப்படுகின்றது. மாணவர்கள் இந்த உத்தி முறையைக் கொண்டு தங்கள் உரையாடலில் கேட்கப்படும் கேள்விகளுக்கு ஏற்ப விடையளிக்கலாம். இவற்றின் அடிப்படையில் பேசுவதற்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

1. இடம் & மக்கள் - **P**eople & **P**lace
2. முகபாவனை & சூழல் - **E**motion & **E**nvironment
3. நடவடிக்கை & செயல் - **A**ctivity & **A**ction
4. காரணம் விளைவு - **R**eason & **R**esolution
5. ஆலோசனை & தீர்வு - **S**olution & **S**uggestion

**<u>இடம் & மக்கள்</u>**



- ✓ காட்சியில் உள்ள இடம் எங்குள்ளது?
- ✓ எதைப் பற்றியது?
- ✓ மனிதர்கள் – அங்கிருப்பவர்கள் யார்?

(மாணவர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், விளையாட்டு வீரர், பொதுமக்கள் மற்றும் அங்கிருக்கும் மனிதர்கள்)

<u>முகபாவனை & சூழல்</u>

- ✓ காணொளியில் உள்ள முகங்கள் வெளிப்படுத்தும் முகபாவனைகளைக் கொண்டு அவர்களது மனநிலையைக் கண்டறிதல்
- ✓ அந்த இடத்தின் பொருள்களைக்கொண்டு அந்த இடத்தில் சூழ்நிலையை அறிதல்

<u>நடவடிக்கை & செயல்</u>

- ✓ அவ்விடத்தில் நடக்கும் நடவடிக்கை நிகழ்ச்சி, சம்பவம் ஆகியவற்றைக் கண்டறிதல்
- ✓ அவற்றை அங்கிருப்பவர்களின் செயல்கள் கொண்டு கண்டுபிடித்தல்

<u>காரணம் விளைவு</u>

- ✓ அந்த இடத்தில் அந்தச் செயல் நடைபெறுவதற்கான காரணத்தைக் கண்டறிதல்
- ✓ அங்கு நடக்கும் நிகழ்ச்சி நடவடிக்கைகளால் ஏற்படும் விளைவுகள் பற்றி கண்டறிதல்

<u>ஆலோசனை & தீர்வு</u>

அந்தக் காணொளியின் பிரச்சனை சிக்கல்களுக்கு ஆலோசனை வழங்குதல்

- சிக்கல்
- விளைவு
- தீர்வு

} Problem Based Learning







**குறிப்பு:-**
மாணவர்களுக்கு மேலே கொடுக்கப்பட்டுள்ள " **PEARS**" உத்தி முறையைப் பின்பற்றி வகுப்பில் கற்பிக்கப்படும். அதனால் பெற்றோர்களும் வீட்டில் அதற்கான பயிற்சியை அளிக்க வேண்டும். " **PEARS**" உத்தி முறை ஒவ்வொரு மாணவருக்கும் கொடுக்கப்படும்.

பெயர்: ________________ வகுப்பு: _____ மதிப்பெண்கள்: ______/50

குறிப்பு : ஏற்புடைய இடத்தில் புட்குறியிடவும்☑

| படித்தல் | |
|---|---|
| மிகத் தெளிவான சரியான உச்சரிப்பு , சரளமான வாசிப்பு<br>சரியான ஏற்றயிறக்கமும் தயக்கமற்ற ஏற்ற ஓசை நயம் கொண்டிருத்தல் | |
| ஒரு சில தவறுகள் மட்டுமே கொண்ட கருத்தைப் புரிந்துகொள்வதில் தடை ஏற்படாத உச்சரிப்பு<br>ஓரளவுக்குச் சரளமான வாசிப்பு<br>ஓரளவுக்குச் சரியான ஏற்றயிறக்கமும் தயக்கமற்ற ஓசை நயம் கொண்டிருத்தல் | |
| ஓரளவுக்குத் தெளிவான உச்சரிப்பு<br>ஒரு சில தவறுகளை மட்டும் கொண்ட சரளமான வாசிப்பு<br>ஓரளவுக்குச் சரியான ஏற்றயிறக்கமும் ஓசை நயம் கொண்டிருத்தல் | |
| கருத்தைப் புரிந்து கொள்ள தடையாக அமைந்த பல உச்சரிப்பு பிழைகளைக் கொண்ட வாசிப்பு<br>தயக்கத்துடன் ஏற்றயிறக்க மற்றும் ஓசை நயமின்றியும் கொண்டிருத்தல் | |
| மிகவும் தெளிவற்ற பல உச்சரிப்பு பிழைகளைக் கொண்ட வாசிப்பு<br>அதிக தயக்கத்துடனும் ஏற்றயிறக்கம் ஓசை நயமின்றியும் கொண்டிருத்தல் | |

| ஒளிக்காட்சி உரையாடல் | |
|---|---|
| மிகக் குறைந்த அளவு தூண்டுதல் தேவைப்படும் நிலை. போதுமான அளவு கருத்துகளைக் கூறல்<br>மிகப் பொருத்தமான சொற்களையும் மொழியையும் பயன்படுத்துதல் | |
| சில வேளைகளில் தூண்டுதல் தேவைப்படும் நிலை. ஓரளவு கருத்து வளர்ச்சி உள்ளது.<br>பெரும்பாலும் பொருத்தமான சொற்களையும் மொழியையும் பயன்படுத்துதல் | |
| அடிக்கடி தூண்டுதல் தேவைப்படும் நிலை. அடிப்படைச் சொற்களைப் பயன்படுத்துதல்; சில வேளைகளில் பொருத்தமற்றதாக இருத்தல் | |
| தொடர்ச்சியாகத் தூண்டுதல் தேவைப்படும் நிலை; அடிப்படைச் சொற்களைப் பயன்படுத்துதல்; கருத்துகளைத் தெளிவாக எடுத்துரைக்க இயலாமை; தயக்கம் காட்டுதல் | |
| தொடர்ச்சியாகக் தூண்டுதல் தேவைப்படும் நிலை; பெரும்பாலும் பொருத்தமற்ற சொற்களைப் பயன்படுத்துதல்; கருத்துகளைத் தெளிவாக எடுத்துரைக்க இயலாமை; பொருத்தமற்ற இடங்களில் நிறுத்துதல் | |

| ஒளிக்காட்சியோடு தொடர்புடைய உரையாடல் | |
|---|---|
| கேட்கப்படும் கேள்விக்கு ஏற்ப உரையாடலிலும் கருத்துப் பரிமாற்றத்திலும் தொடர்ச்சியாக ஈடுபடுதல் | |
| கேட்கப்படும் கேள்விக்கு ஏற்ப உரையாடலிலும் கருத்துப் பரிமாற்றத்திலும் பெரும்பாலும் ஈடுபடுதல் | |
| கேட்கப்படும் கேள்விக்கு ஏற்ப உரையாடலிலும் கருத்துப் பரிமாற்றத்திலும் சில வேளைகளில் ஈடுபடுதல் | |
| கேட்கப்படும் கேள்விக்கு ஏற்ப உரையாடலிலும் கருத்துப் பரிமாற்றத்திலும் பெரும்பாலும் ஈடுபட இயலாமை | |
| கேட்கப்படும் கேள்விக்கு ஏற்ப உரையாடலிலும் கருத்துப் பரிமாற்றத்திலும் ஈடுபட இயலாமை | |

ஆசிரியர் கையொப்பம் ___________________ பெற்றோர் கையொப்பம் ___________________

தேதி ___________________ தேதி ________________

**மேற்கூறிய திறன்களை மேம்படுத்த ஆசிரியர் வகுப்பில் மேற்கொள்ளும் சில நடவடிக்கைகள் பின்வருமாறு:**

| **பள்ளிச் சார்ந்த நடவடிக்கைகள்** |
|---|
| • மௌன வாசிப்பு - Uninterrupted Sustained Silent Reading (USSR)<br>• சூச்சினில் வாசிப்பை நேசிப்போம் - வாரம்தோறும் வாசிக்கும் நேரம்<br>• இலக்குகளை நோக்கிய வாசிப்பு<br>• கதை நேரம்<br>• தமிழ்மொழி இருவார நடவடிக்கைகளில் மொழியின் மீதும் பண்பாட்டின் மீதும் ஆர்வத்தை ஏற்படுத்துதல்<br>• மொழி விளையாட்டு<br>• பாரம்பரிய விளையாட்டுக்கள்<br>• பண்பாட்டை அடிப்படையாக்கொண்ட நடவடிக்கைகள்<br>• மாணவர்களைப் போட்டிகளில் கலந்துகொள்ள ஊக்குவித்தல்<br>• மாணவர்களை ஒப்படைப்புகள் செய்ய ஆர்வமூட்டுதல்<br>• மாணவர்களுக்குத் தேர்வுத்தாள்களில் பயிற்சி அளித்தல்<br>• மாணவர்களைப் பேச்சுத் தமிழில் பேச ஊக்கமளித்தல் |

# P6 Perliminary Examination / PSLE Examination– TOS (2025)

| **எண்** | **தலைப்புகள்** | **வகை** | **வினாக்களின் எண்ணிக்கை** | **மதிப்பெண்** |
|---|---|---|---|---|
| **தாள் 1**<br>கட்டுரை | **தலைப்புக் கட்டுரை அல்லது படக்கட்டுரை**<br>(இரண்டு வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவைத் தெரிவு செய்தல்) | OE | 2 | **40**<br>**மதிப்பளவு**<br>**(20%)** |
| **Booklet A** | | | | |
| **தாள் 2**<br>**மொழி** | **வேற்றுமை**<br>• தெரிவுவிடை வினா | MCQ | 5 | 10 |
| | **செய்யுள் / பழமொழி**<br>• தெரிவுவிடை வினா | MCQ | 5 | 10 |
| | **அடைமொழி எச்சம்**<br>• தெரிவுவிடை வினா | MCQ | 5 | 10 |
| மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும் | **முன்னுணர்வுக் கருத்தறிதல்**<br>தெரிவுவிடை வினா | MCQ | 5 | 10 |
| | **தெரிவுவிடைக் கருத்ததிறதலும் சொற்பொருளும்**<br>தெரிவுவிடை வினா | MCQ | 4<br>1 | 10 |
| **Booklet B** | | | | |
| **எண்** | **தலைப்புகள்** | **வகை** | **வினாக்களின் எண்ணிக்கை** | **மதிப்பெண்** |
| **தாள் 2**<br>**மொழி** | **ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**<br>கோடிட்ட இடங்களை நிரப்புதல் | FIB | 4 | 8 |
| மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும் | **கருத்துவிளக்கப்படக் கருத்தறிதல்**<br><br>**குறிப்பு எழுதுதல் (அ) சுயவிடைக் கருத்தறிதல்** | MCQ<br><br>OE | 3<br><br>1 | 6<br><br>4 |
| | **சுயவிடைக் கருத்தறிதல்**<br>சுயவிடை<br>**குறிப்பு எழுதுதல் (அ) சுயவிடை** | OE<br><br>OE | 5<br><br>1 | 18<br><br>4 |
| **தாள் 2 - மொத்தம்** | | | **41** | **90**<br>**மதிப்பளவு**<br>**(45%)** |
| **தாள் 3**<br>**கேட்டல் கருத்தறிதல்** | தெரிவுவிடை வினா | | 10 | **20** |
| **தாள் 3 - மொத்தம்** | | | | **20**<br>**மதிப்பளவு**<br>**(10%)** |
| **தாள் 4 வாய்மொழி** | **வாசிப்பு**<br>வாய்விட்டு வாசித்தல்<br>**காணொளி உரையாடல்**<br>காணொளி பற்றி விவரித்தல்<br>காணொளியோடு தொடர்புடைய உரையாடல் | Reading<br><br><br>OE<br><br>OE | 1<br><br><br>1<br><br>1 | 20<br><br><br>15<br><br>15 |
| | **தாள் 4 - மொத்தம்** | | | **50**<br>**மதிப்பளவு**<br>**(25%)** |

**கால அளவு**
**தாள் 1 – 50 நிமிடங்கள்**
**தாள் 2 – 1 மணி 40 நிமிடங்கள்**

**கற்றல் வளங்கள்**

- **கல்வியில் பெற்றோர் பங்கு**
  http://parents-in-education.moe.gov.sg/
  கல்வியமைச்சின் இணையத்தளமான இந்தத் தளத்தில் பெற்றோர் பிள்ளைகளின் கற்றலுக்கு உதவுவதற்குப் பயன்படும் தகவல்களும் வளங்களும் உள்ளன.

- **தமிழ்மொழிக் கற்றல் வளர்ச்சிக் குழு**
  http://tamil.org.sg/
  பள்ளிக்கு அப்பாலும் பிள்ளைகள் தமிழ்மொழியைக் கற்பதற்காகச் சமூக அமைப்புகள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்களை இந்தத் தளத்தில் காணலாம்.

- **தமிழ் வாசிப்புக் குழு**
  http://www.nlb.gov.sg/golibrary/
  மாணவர்கள் பரந்துபட்ட அறிவைப் பெற வேண்டும் என்பதற்காக நூலகம் எண்ணிலடங்கா புத்தகங்களை இரவல் பெறவும் தரவிறக்கம் செய்து படிக்கவும் இந்தத் தளத்தை உருவாக்கியுள்ளது. நாங்கள் இந்தத் தளத்தைப் பயன்படுத்தி பயன்பெற ஊக்குவிக்கிறோம்.

- **மாணவர் கற்றல் தளம்**

  https://vle.learning.moe.edu.sg/login

- **மாணவர் முரசு புதிர்**

  https://www.tamilmurasu.com.sg/

**'கற்க கசடறக் கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக'** என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப மாணவர்கள் பள்ளியில் கற்றுத் தரும் கற்பித்தல் உத்தி முறைகளைக் கவனமாகக் கற்று அதைப் பயிற்சியில் பிழையற பின்பற்ற ஊக்குவிக்கிறோம். பெற்றோர்களும் மாணவர்களுக்குப் பக்கபலமாக இருந்து தேர்வுக்கு உதவவே இக்கையேட்டை வழங்கியுள்ளோம்

முற்றும்